தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை 600 006.

ந.க.எண். 0089 / கே / இ1 / 2020, நாள் 11.06.2020.

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக்கல்வி - 2019/2020 ஆம் கல்வியாண்டு - 10ஆம் வகுப்பு மற்றும் 11ம் வகுப்பு பொதுத் தேர்வுகள் ரத்து செய்தது - அனைத்து அரசு/ அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள்(சிபிஎஸ்சி பள்ளிகள் தவிர) மாணவர்களின் வருகைப் பதிவேட்டினை மாவட்டக் கல்வி அலுவலரிடம் ஒப்படைத்தல் – சார்ந்து |
| பார்வை | அரசாணை (நிலை) எண்.54 பள்ளிக் கல்வித் (அ.தே)துறை நாள்.09.06.2020 |

.........

பார்வையில் காணும் அரசாணையில், 2019-20 ஆம் கல்வியாண்டில், 10 ம் வகுப்பு பொதுத் தேர்வு மற்றும் 11ம் வகுப்பில் விடுப்பட்ட பாடங்களான வேதியியல், கணக்கு பதிவியல், புவியியல் (புதிய பாடத்திட்டம்), வேதியியல், கணக்கு பதிவியல், தொழிற்கல்வி கணக்கு பதிவியல் (பழைய பாடத்திட்டம்) ஆகியவற்றிற்கான பொதுத் தேர்வுகள் ரத்து செய்யப்பட்டுள்ளது.

மேலும் மாணவர்களுக்கான மதிப்பெண் மதிப்பீடு அவர்களின் காலாண்டு மற்றும் அரையாண்டு தேர்வுகளில் அந்தந்த மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் 80 சதவிகித மதிப்பெண்களும், மாணவர்களின் வருகை பதிவின் அடிப்படையில் 20 சதவிகித மதிப்பெண்களும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து உயர்நிலை/ மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் பின்வரும் அறிவுரை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிது.

1. அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும், தங்கள் பள்ளியில் பத்தாம் வகுப்பு பயின்று பொதுத் தேர்வெழுதவிருந்த அனைத்து மாணவர்களின் 2019-20 கல்வியாண்டிற்கான வருகைப் பதிவேடுகளும் 21.03.2020 வரை முழுமையாக இருக்கிறதா என்பரை சரிபார்த்த பின்பு, வருகைப் பதிவேடுகளை பிரிவு வாரியாக அடுக்கிக் கட்டி 12.06.2020(வெள்ளிகிழமை) அன்று மாலை 5.00 மணிக்குள் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்விஅலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

2. அதே போன்று அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும், தங்கள் பள்ளியில் பதினோராம் வகுப்பு பயின்று வேதியியல், கணக்குப்பதிவியல் மற்றும் புவியியல் பாடத் தேர்வுகளை எழுதவிருந்த அனைத்து மாணவர்களின் 2019-2020 கல்வியாண்டிற்கான வருகைப் பதிவேடுகளும் 29.02.2020 வரை முழுமையாக இருக்கிறதா என்பதை சரிபார்த்த பின்பு, வருகைப் பதிவேடுகளை பிரிவு வாரியாக (section wise) அடுக்கிக் கட்டி 12.06.2020 (வெள்ளிகிழமை) அன்று மாலை 5.00 மணிக்குள் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

எனவே அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் மற்றும் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு/ அரசு உதவிபெறும் பள்ளிகள், சுயநிதி பள்ளிகள், பிற துறை சார்ந்த பள்ளிகள், மெட்ரிக் பள்ளிகள், ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் (சிபிஎஸ்சி பள்ளிகள் தவிர) உள்ள 10 ஆம் வகுப்பு மற்றும் 11 ஆம் வகுப்பு மாணவர்களின் வருகைப் பதிவேட்டினை 12.06.2020 அன்று தங்கள் மாவட்டக் கல்வி அலுவலரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வருகைப் பதிவேட்டின் கடைசி பக்கத்தில் தலைமையாசிரியர் / முதல்வர் கையொப்பமிட்டு மாவட்டக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். அதனை பெற்றுக் கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்/ பள்ளித் துணை ஆய்வாளர் / தலைமையாசிரியர்களும் வருகைப்பதிவேட்டின் கடைசி பக்கத்தில் கையொப்பமிடப்பட வேண்டும். 10 மற்றும் 11 ஆம் வகுப்பு வாரியாக பெறப்பட்டதற்கும்/ ஒப்படைத்ததற்கும் ஒரே படிவத்தில் ஒப்புதல் சீட்டு இருக்க வேண்டும். இரண்டு அசல் ஒப்புதல் சீட்டில் ஒன்று அந்தந்த பள்ளிக்கும் மற்றொன்று மாவட்டக் கல்வி அலுவலரும் வைத்திருக்க வேண்டும்.

மாவட்டக் கல்வி அலுவலகத்தில் நடவடிக்கை மேற்கொள்ளும் போது சமுக இடைவெளி பின்பற்ற வேண்டும். கிருமி நாசினிகள் கொண்டு அவ்வப்போது கைகளை சுத்தம் செய்ய வேண்டும். ஒவ்வொரு பள்ளிக்கும் தனித் தனியாக நேரம் ஒதுக்கீடு செய்து அவர்களுக்கான நேரத்தினை அந்தந்த பள்ளிக்கு தெரிவிக்க வேண்டும்.

ஒப்படைக்கப்பட்ட வருகைப்பதிவேட்டினை பள்ளிவாரியாக முத்திரை இடப்பட்ட உறையில் தனி அலமாரியில் மாவட்டக் கல்வி அலுவலர் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் மாவட்டத்தில் எடுக்கப் பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை 12.06.20 அன்று மாலை 5 மணிக்குள் பள்ளிக் கல்வி இயக்குநர் மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

நகல்

1. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை-9 அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
2. ஆணையர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை-6 அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
3. இயக்குநர், அரசு தேர்வுத் துறை அவர்களுக்கு உரிய நடவடிக்கைக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.
4. மெட்ரிக் பள்ளிகள் இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.